3. கவன ஈர்ப்பு

பேரூராட்சிகளிலும் ஊர் நலப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள ஊர்நலப் பணியாளர்கள் பதவிகளைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

நடப்பாண்டு முதல் பேரூராட்சிகளிலும் இத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பாப்பா உமாநாத், வெ. இராசு, கே. ரமணி, கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கொடுத்த கவன ஈர்ப்பு மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.